Ti Nb Ir Ta Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.

Tiaano® Innovation In Inert Metals 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to May 16 : 963 Nos.
  - Up to Apr. 16 : 951 Nos.
- **Performance May 16 …**
  - Turnover growth : 2.26%
  - Employment growth : -1. 65%
  - 100% Attendance : 10.05 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## சோதனைகளை எதிர்கொண்டு சாதனைகள் படைக்கலாம்!

முட்கள் இல்லாத ரோஜா செடிகளே இல்லை. இந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்போது நம்முடைய வாழ்க்கையில் பலவிதமான இடர்பாடுகளை எதிர்கொள்கிறோம். இவற்றையெல்லாம் நாம் முன்னேற்றத்துக்கான ஒரு படிக்கட்டாக மாற்றி கொள்ள வேண்டும்.

இந்த உலகில் துன்பம், கவலை போன்றவை எல்லாம் நிரந்தரமல்ல. நம்முடைய வாழ்க்கைப் பாதையில் ஒவ்வொரு பள்ளத்திற்கு பின்பும் ஒரு மேடு உண்டு. உங்களுடைய உடைமைகளை எல்லாம் இழந்திருந்தாலும் உங்களது திறமை, தனித்தன்மை எதையும் நீங்கள் இழக்கவில்லை. எனவே எல்லாவற்றையும் திரும்பப் பெற்று உங்கள் வாழ்க்கையை வசந்தமாக்கிக் கொள்ள முடியும்.

நடந்த சம்பவங்களை நாம் நினைத்து நினைத்து கவலைப்படுவதால் எந்த ஒரு முன்னேற்றமும் நம் வாழ்வில் ஏற்படப் போவதில்லை. வரும் காலத்தை குறித்தே நாம் சிந்தித்து செயல்பட வேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கை அமைந்துள்ளது. நாம் உறுதியாக வெற்றி பெறுவோம் என்று நினைத்தால் நமக்கு வெற்றி கிடைக்கும்.

"வீட்டுக்கு வீடு வாசற்படி" என்பதுபோல் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஒரு பிரச்சினை உண்டு. இவற்றின் தன்மை வேண்டுமானால் மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். எனவே இடர்பாடுகள் நம்முடைய கல்வி – முயற்சிக்கு தடையாக இருக்கக்கூடாது. இவைகளை நாம் ஒரு பெரிய மலையாக கருதி கவலை அடைந்தால் நமது லட்சியத்தை அடையமுடியாது.

எனவே நம்முடைய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு தடையாக இருந்துவரும் வறுமை, நோய், விபத்துகள் மற்றும் இயற்கையால் ஏற்படுகின்ற சீற்றங்கள் போன்றவற்றை எண்ணி வருந்தாமல் ஊக்கத்துடன் சோதனைகளை தகர்த்து சாதனை செய்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் உபயோகமாக வாழ வேண்டும்.

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director – Admin*

## கருவிலிருந்து கல்லறைவரை

கருவறையில் உருவாக்கி உயிர் கொடுத்த உறவு
கண்ணிமையில் காத்து கல்வியளித்த உறவு
உடன் பிறந்து உள்ளத்தில் உறவாடிய உறவு
உயிரினில் புது உயிராக ஜனித்த காதலெனும் உறவு
அத்தை மாமன் என்று சுற்றிலும் இரத்தமாகிய உறவு
உடன் பிறவா உயிரினுள் கலந்த நட்பெனும் உறவு
ஈன்றெடுத்த தேவதைகளாய் மகன் மகளெனும் உறவு
பிறப்பிலிருந்து இறப்பு வரை நம்மினுள் உறவுகள்
உறவுகளோடு உறவாட கூட நேரமில்லையென்று
உயிரற்ற உடமைகளுடன் உறவாட முந்தியடிக்கும் மனிதா
உள்ளத்தால் நேசி கருவிலிருந்து கல்லறைவரை…
உலகுடனே உறவாடு நீ இருக்கும் வரை…

*Compiled By : Ms. P. Nirmala Devi*
*Finance*

## FUNCTIONAL WISHES



Kamarajar Birthday
15th July

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. S. Maragatham** — **05th Jul.**
Coating

**Mr. BB. Ruben Sonar** — **06th Jul.**
Coating

**Mr. M. Durai** — **08th Jul.**
Production

**Mrs. S. B. Kohila** — **10th Jul.**
Quality Control

**Mrs. G. Kalaivani** — **19th Jul.**
Facilitation

**Mrs. M. Alamelu** — **22nd Jul.**
Administration

**Mr. P. Arumugam** — **24th Jul.**
Design

**Mr. R. Nagan** — **24th Jul.**
Quality Control

**Best Wishes from Tiaano Employees**

*We need to find God,*
*And he cannot be found in noise*
*And restlessness.*
*God is the friend of silence.*
*See how nature – trees, flowers,*
*Grass – grows in silence;*
*See the stars, the moon and the sun,*
*How they move in silence…*
*We need silence*
*To be able to touch souls.*

– ***Mother Teresa***

## கான்.:.பிடன்ஸ் கார்னர்

தன் பிறந்த நாளுக்கு, தானே கைப்பட செய்த பைகளையும் அலங்காரப் பொருட்களையும் கொண்டு போய் முதியோர் இல்லங்களில் விநியோகிப்பது அந்த இளம்பெண்ணின் வழக்கம். அந்த ஆண்டு குழந்தை பிறந்திருந்தது. எனவே, கைப்பைகள் செய்ய நேரமில்லை, ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம் என்றெல்லாம் யோசித்தபோது வேறொன்று தோன்றியது.

முதியோர் இல்லத்திற்குத் தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனாள் அந்தப்பெண். அரும்பின் வருகையைப் பழுத்த பழங்கள் கொண்டாடின, எல்லோரும் குழந்தையைக் கொஞ்சித் தீர்த்தார்கள். நம்மிடம் இருப்பதிலேயே விலை மதிப்பில்லாததை மற்றவர்களுடன் பகிர்ந்தால் வருகிற மகிழ்ச்சி எல்லை இல்லாதது. அது பொருளானாலும் சரி. பிள்ளையானாலும் சரி.

— கான்.:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தன்னம்பிக்கை

நம் நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு வேலை தேடி சென்றார் ஒருவர். அங்கே ஒரு விற்பனை நிலையத்தில்…சேல்ஸ் துறையில் உனக்கு முன் அனுபவம் இருக்கிறதா? மேனேஜர் கேட்க, நான் எனது நாட்டில் சேல்ஸ் மேனேஜராகத்தான் வேலைப்பார்த்தேன் என்றார். அப்படியானால் உனக்கு நான் வேலை தருகிறேன். நாளை முதல் நீ வேலையைத் தொடங்கலாம். கடை மூடும்பொழுது நீ எப்படி வேலை செய்தாய் எனப் பார்ப்பதற்கு நான் வருவேன்.

முதல் நாள் கடை மூடும் நேரம் மேனேஜர் வருகிறார். இன்று எத்தனை நபர்களிடம் விற்பனை செய்தாய்? ஒருவரிடம் மட்டும்… என்ன ஒருத்தர் மட்டுமா?… உன்னுடன் வேலை பார்க்கும் மற்றவர் எல்லாம் நாள் ஒன்றுக்கு 20-லிருந்து 30-வரை விற்பனைச் செய்ய கூடியவர்கள். உன் வேலை நிரந்தரமாக வேண்டுமானால் நீயும் அவர்களைப் போல் முயற்சி செய்ய வேண்டும். சரி எவ்வளவு டாலருக்கு விற்றாய்? "$1012347.64".

ஒரே ஒரு நபரிடம் இவ்வளவு டாலருக்கா? என்னென்ன விற்றாய்? "முதலில் அவரிடம் சிறிய தூண்டில், கொஞ்சம் பெரிய தூண்டில், அதை விட பெரிய தூண்டில், .:.பிஸ்ஸிங் ராட், .:.பிஸ்ஸிங் கியர் எல்லாம் விற்றேன். பிறகு அவரிடம் எங்கே மீன் பிடிக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் கரையில் அமர்ந்து மீன் பிடிப்பதாகச் சொன்னார். உடனே நமது போட்டிங் டிபார்ட்மெண்ட் சென்று ஒரு போட்டை விற்றுக் கொடுத்தேன். அவர் என்னுடைய கார் இந்த போட்டை இழுக்குமா என்றுக் தெரியவில்லையே என்றார்.

நான் நமது ஆட்டோமோட்டிவ் டிபார்ட்மெண்டுக்கு சென்று ஒரு 4x4 ட்ரக் விற்றுக் கொடுத்தேன். பின்னர் அவரிடம் நீங்கள் எங்கு தங்கி இருக்கிறீர்கள் என்றுக் கேட்டேன். இப்போதைக்கு இடம் எதுவும் இல்லை என்று சொன்னார். உடனே நான் அவருக்கு 4 பேர் தங்க கூடிய அளவுள்ள டெண்ட்-ம் விற்றுக் கொடுத்தேன். என்ன ஒரு தூண்டில் வாங்க வந்தவரிடமா இவ்வளவும் விற்றாய்?

மேனேஜர் அதிசயமாய் கேட்க, "அய்யோ இல்லை சார்! அவர் தலை வலிக்காக மாத்திரை வாங்க வந்தார். நான் தான் மீன் பிடித்தால் மனசுக்கு ரொம்ப ரிலாக்ஸ் – ஆக இருக்கும். எப்போதும் தலைவலியே வராது என்றுக் கூறினேன்".

*Compiled By : Mrs. T. Gowsala*
*Marketing*

## தெரிந்து கொள்வோம்

### Solutions to environmental problems

- Save, recycle, reuse paper.
- Reforestation - restock the destroyed forests by planting new trees.
- Say no to plastics.
- Use paper bags and jute bags.
- Remember four R. Reduce, Reuse, Recycle, Recover.
- Develop habits that are environment friendly.

### Amazing Facts About Human Body

- Eyeball is only part that remains in same size from birth to death.
- Human skin can be spread over an area of 22 square feet.
- Speed of persons sneezing is 160 km per hour.
- In lifetime a man drinks @ 50,000 litres of water.
- Human hair continues to grow upto 16 inches in a year.
- Eye is the first most important organ formed in the womb.
- Human body contains 79% water & fatal if it drops to 69%.
- Liver is the largest gland in the human body.
- A filly developed human brain weighs @ 1424 gms.
- In a hour man can speak @ 2500 words.
- During your lifetime, you will produce enough saliva to fill two swimming pools.
- The brain is much more active at night than during the day.
- Your nose can remember 50,000 different scents.

*Compiled By : Mrs. S. Sahayapani Shiny*
Marketing

### மேலான தவம் எது?

தாய், தந்தை, குரு ஆகிய மூவரையும் மரியாதையுடனும் மகிழ்வுடனும் நடத்துவதை விட ஒருவனுக்கு மேலான தவம் எதுவும் இல்லை. இவர்களை மீறிச்செய்யும் செயல்கள் பலன் அளிப்பதில்லை.

### The Great Mother

Thomas Edison came home and gave a paper to his mother. He told her, "My teacher gave this paper to me and told me to only give it to my mother". His mother's eyes were tearful as she read the letter out loud to her child: Your son is a Genius. This school is too small for him and doesn't have enough good teachers for training him. Please teach him yourself.

Many, many years after Edison's mother died and he was now one of the greatest inventors of the century, one day he was looking through old family things. Suddenly he saw a folded paper in the corner of a drawer In a desk. He took it and opened it up. On the paper was written: Your son is addled [mentally ill]. We won't let him come to school any more.

Edison cried for hours and then he wrote in his diary: "Thomas Alva Edison was an addled child that, by a hero mother, became the genius of the century."

*Compiled By : Mrs. M. Sudha*
Marketing

### தகவல் நுணுக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வணங்கத் தகுந்தவர்கள் | - | தாயும், தந்தையும் |
| 2 | வந்தால் போகாதது | - | புகழ், பழி |
| 3 | போனால் வராதது | - | மானம், உயிர் |
| 4 | தானாக வருவது | - | இளமை, முதுமை |
| 5 | நம்முடன் வருவது | - | புண்ணியம், பாவம் |
| 6 | அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| 7 | தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| 8 | நம்மால் பிரிக்க முடியாதது | - | பந்தம், பாசம் |
| 9 | அழிவை தருவது | - | பொறாமை, கோபம் |
| 10 | எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |
| 11 | கடைத்தேற வழி | - | உண்மையும், உழைப்பும் |
| 12 | ஒருவன் கெடுவது | - | பொய் சாட்சி, செய் நன்றி மறப்பது |
| 13 | வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| 14 | மிக மிக நல்ல நாள் | - | இன்று |
| 15 | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 16 | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 17 | மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| 18 | மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| 19 | மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| 20 | கீழ்தரமான விஷயம் | - | பொறாமை |
| 21 | நம்பக்கூடாதது | - | வதந்தி |
| 22 | ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 23 | செய்யக்கூடாதது | - | தவறுகள் |
| 24 | செய்ய வேண்டியது | - | உதவி |
| 25 | விலக்க வேண்டியது | - | விவாதம் |
| 26 | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 27 | நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |

*Collected from Internet*

## கவிதைகள்

### நட்பு

நட்புக்கு முகம் தேவையில்லை,
மனம் தேவை.
உண்மை நட்பை
ஒரு வரியில் சொல்ல முடிவதில்லை.
சொன்னால் யாரும்
புரிந்து கொள்வதில்லை.
மனிதன் நட்பை உலகில் இன்னும்
வளர்த்துக் கொள்வதில்லை,
இருந்தால் யுத்தம் தேவையில்லை.

### எது அழகு

வானத்தில் வளைய வரும்
வட்ட நிலாவும் அழகு தான் !

கைக்கு சிக்காத
காற்றும் அழகு தான் !

மலையோடு உறவாடும்
முகிலும் அழகு தான் !

மண்ணை முத்தமிடும்
மழையும் அழகு தான் !

மனதில் நினைத்தவுடன்
இவை அத்தனையும்

மறக்கச் செய்யும் மழலையே
உன் முகம் பேரழகு தான் !

*Compiled By : Miss. T. Regi*
*Facilitation*

## ஹைக்கூ

அவசரமாகத் தவறு செய்வதை விட -
தாமதமாகச் சரிவர செய்வது மேல்...!

## சிந்தனைக்கு

ஒரு பணியை நாம் ஈடுபாட்டோடு செய்யும் போது அது கடுமையாக அல்லது சிரமமாக இருப்பினும், களைப்பை நாம் உணர்வதில்லை. நமது வழக்கமான தினசரி செயல்பாட்டை உற்சாகத்தோடும், ஊக்கத்-தோடும் நாம் செய்யும்போது அதனை விரைவாகவும், திறமையாகவும் நம்மால் செய்ய முடியும் என்பது அனுபவப் பூர்வமான உண்மையாகும்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LIV)

### ஜாக்கிரதை

இதற்காக ‘இன்ஃபோ செய்டன் என்ற புதுப் பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, எந்தத் தகவல் எந்த இடத்தில் எப்படிக் கிடைக்கும் என்கிற விவரங்கள், அறிவிப்புகளாக வெளியிடப்படுகின்றன.

‘நான் இன்றுதான் வேலைக்குச் சேர்ந்தேன்: எனக்கு ஓர் ஈ-மெயில் முகவரி தந்திருக்கிறார்கள். அதை எப்படிப் பயன்படுத்துவது?’ என்று ஒருவர் அப்பாவியாகக் கேட்டால், மற்றவர்கள் அவருக்கு நிதானமாக விளக்கம் அளித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்படிப் புதியவர்கள் பொதுவாகக் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் விடையளித்து ஓர் ஆவணம் வெளியிடப்பட்டு இருக்கும். அதை அவர் கையில் கொடுத்துவிட்டால் போதும்.

ஒருவேளை, புதியவரின் கேள்விக்கு அதில் விடை இல்லாவிட்டால் அல்லது அந்த பதில் அவருக்குப் புரியாவிட்டால் அதே ஆவணத்தின் இறுதியில், ஒரு தொலைபேசி எண் அல்லது அலுவலக முகவரி தரப்பட்டிருக்கும் அந்த எண்ணை அழைத்துப் பேசலாம். அல்லது அங்கே நேரில் சென்று விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

இதுபோல், அலுவலகத்தில் இருக்கும் எல்லாத் தகவல்களையும் எங்கே, எப்படிப் பெறுவது என்கிற விவரம் பகிரங்கமாக்கப்படும்போது, அதைத்தான் ‘இன்ஃபோ செய்டன்’ என்று அழைக்கிறார்கள்.

சில நிறுவனங்கள், வாடிக்கையாளர்கள் எந்த விவரம் கேட்டாலும், இத்தனை நிமிஷங்களுக்குள் எங்களால் வழங்க முடியும் என்று பெருமையோடு விளம்பரப்படுத்திக் கொள்வதைக் கவனித்திருப்பீர்கள். இதற்கு அடிப்படை, ‘இன்ஃபோ செய்டன்’ முறைதான்!.

தொழிற்சாலைக்குள் தொடங்கி, அதற்கு வெளியேயும் நன்கு புகழ்பெற்றுவிட்ட செய்டனிடம் விடைபெறுமுன், இதற்கான விதிமுறைகளைச் சுருக்கமாகப் பார்த்துவிடலாம்: எல்லாப் பொருள்களுக்கும் ஓர் இடம் உண்டு. அந்த ‘ஓர் இடம்’ எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.

தொடரும்...

## CHLORINE RECUPERATOR

